கிராமப்புறக் கல்வி மற்றும் இளைஞர் திறன் மேம்பாடுக்காக பணியாற்றும்
ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப் பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று

# தமிழக கிராமத்துப் பள்ளி மாணவர்கள் - இந்திய அளவு போட்டித் தேர்வுகளில் பங்குபெறுதல் "ஆர்வமுள்ள மாணவர்களும், அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்தால் சிறப்பான வெற்றிகள் காத்திருக்கின்றன"

## ஆசிரியர் கலந்தாய்வு கூட்டம் - ரெட்டிப்பாளையம், செங்கல்பட்டு - 19.3.2021



A.R. பாலகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிய காட்சி

ஒரு நாட்டின் வளர்ச்சி மாணவர்களின் கையில்தான் உள்ளது. பெருமைமிக்க திறமைகள் இப்பருவத்தில் தான் கிடைக்கும். மண்ணைக் குழைத்தால்தான் பாண்டம் வரும். மாணவர்களை செம்மைப்படுத்தினால்தான் நாடு வளரும். நாட்டின் ஆக்கப் பூர்வ சக்தியே இந்த மாணவர்கள் தான்.

புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் மாணவர்களின் முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் பங்கு குறித்து கலந்தாய்வு கூட்டம் மார்ச் 19, 2021 அன்று காலை 10.30 மணியளவில் செங்கல்பட்டு மாவட்டம், ரெட்டிப்பாளையம் கிராமத்தில் உள்ள கிராம சேவை மையத்தில் நடைபெற்றது.



செங்கல்பட்டு மாவட்ட கல்வி அலுவலர் திரு. A. நாராயணன் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

"+2 படித்து முடித்த மாணவ-மாணவிகளுக்கு, பொறியியல், மருத்துவம் அல்லாது, கீழ்கண்ட பிற துறைகளில் நுழைவுத் தேர்வு மூலம் ஏராளமான வாய்ப்புகள் உள்ளது.

- சட்டம் (Law)
- விஞ்ஞானம் (Science)
- கால்நடைத் துறை (Veterinary)
- பாதுகாப்புத் துறை (Defence)
- சிற்பக்கலை (Sculpture)
- வடிவமைப்பு (Design)



கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

இது போன்ற மேலும் பல துறைகளை தேர்ந்தெடுத்து படித்தால் மாணவ மாணவிகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்று புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் து.வே. வெங்கடகிரி கூறினார்.

இக்கூட்டத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தின் மாவட்ட கல்வி அலுவலர் **திரு. A. நாராயணன்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.



து.வே. வெங்கடகிரி, செயலாளர்
புதிய தலைமுறை அறக்கட்டளை




தமிழ்த்தாய் வாழ்த்தின் பொழுது சிறப்பு விருந்தினர்கள்



கே.விஜயகோபால் அவர்கள்
சிறப்புரையாற்றிய காட்சி

காலை தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது. புதிய தலைமுறை அறக்கட்டளையின் தலைமைத் திட்டங்கள் அதிகாரி கே.விஜயகோபால் அவர்கள் பேசுகையில், தமிழக கிராமத்துப் பள்ளி மாணவர்கள், இந்திய அளவு போட்டித் தேர்வுகளில் பங்குபெறவேண்டும். ஆர்வமுள்ள மாணவர்களும், அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்தால் சிறப்பான வெற்றிகள் காத்திருக்கின்றன என்று கூறினார்.



செட்டிப்பேடு கிராமப்புறக் கல்வி மையம்
காஞ்சிபுரம்

செங்கல்பட்டு மாவட்டம், சிங்கப்பெருமாள் கோவில் அருகே, வெங்கடாபுரத்தில் உள்ள **ஞானோதயா உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் A.R. பாலகிருஷ்ணன்** அவர்கள் பேசுகையில், ஒவ்வொரு மாணவனின் பலத்தையும் பலவீனத்தையும் கண்டறிந்து அடையாளப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள் தான். கல்வி என்பது புத்தகம் சார்ந்த, தேர்வு சார்ந்த விஷயம் மட்டுமல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கல்வி என்பது, புத்தக அறிவுடன் சேர்த்து மாணவர்களுக்கு பொது அறிவையும், சமுதாய சிந்தனையையும் உண்டாக்க வேண்டும் என்றும் கூறினார்.



காலூர் கிராமப்புறக் கல்வி மையம்
காஞ்சிபுரம்

அதனைத்தொடர்ந்து சிறப்பு விருந்தினர் **செங்கல்பட்டு மாவட்டத்தின் மாவட்ட கல்வி அலுவலர் திரு. A. நாராயணன்** அவர்கள் பேசுகையில், எனக்கு கொடுக்கப்பட்ட தலைப்பு மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களின் பங்கு என்பது தான். நான் ஒன்றாம் வகுப்பு படிக்கும் பொழுது, எனக்கு தமிழில் “ஓ” என்ற எழுத்து எழுத வராது. ஆசிரியை சிந்தாமணி பல முறையில் எனக்கு பயிற்சி கொடுத்தார். ஆனால் பலன் இல்லை. ஒரு நாள் பள்ளி முடிந்தவுடன் என்னை அவர் இல்லத்திற்கு அழைத்துச் சென்று பயிற்சி கொடுத்தார். அன்று இரவு வெகு நேரம் எனக்கு பயிற்சி கொடுத்து “ஓ” என்ற எழுத்தை என்னை எழுத வைத்து விட்டார். இன்றும் அந்த ஆசிரியையின் நல்ல உள்ளத்தை நான் எண்ணி பார்த்துப் பெருமைப்படுகிறேன்.



தேசிய அறிவியல் தினம் - 26.2.2021
சென்னை

எத்தனை ஆண்டுகள் வேலை செய்தோம் என்பது முக்கியமல்ல. மாறாக எத்தனை மாணவர்களை முன்னேற்றியுள்ளோம் என்பதே முக்கியம். தன்னிடம் கற்ற மாணவன் ஒருவன் உயர்ந்த நிலையில் வாழ்கிறான் என்று கேள்விப்படும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அந்த நல்ல வார்த்தைகளை செவிமடுப்பது ஒன்றே ஒரு நல்ல ஆசிரியருக்கு கிடைக்கும் அரிய பரிசாகும்.



சுதந்திர தினக் கொண்டாட்டம் - 15.8.2020
விலாப்பாக்கம் கல்வி மையம், திருவள்ளூர் மாவட்டம்

படிப்பு என்பது மாணவர்கள் முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியம். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். முதலில் மாணவன் நல்ல சத்தான சுகாதாரமான ஆகாரங்களை சாப்பிட வேண்டும், நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்து கொண்டு ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும். பிறருக்கு உதவும் மனப்பான்மையை வளர்த்து கொள்ள வேண்டும், இவைகளோடு பாடங்களில் நல்ல மதிப்பெண் என்பது கல்வியை முழுமைப்படுத்தும். ஒவ்வொரு ஆசிரியரும் எதிர்கால குடிமகன்களை உருவாக்கும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு தனது சேவையினை சிறப்பாக வழங்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

> **“மாணவர்களை ஆசிரியர்கள் கையாள்வதில் மிகுந்த கவனத்துடன் இருக்கவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அன்பு கலந்த மனித நேயத்தோடு கல்வி கற்பிக்க வேண்டும்.”**



குடியரசு தினம், 26.1.2021,
அரியமங்கலம் கல்வி மையம், திருச்சி


**புதிய தலைமுறை அறக்கட்டளை**

எண்: 24, ஜி.என்.செட்டி சாலை, தி.நகர், சென்னை - 600 017 அலைபேசி எண்கள்:: 8754417338, 8754417308, 8754417500, 8754417322

மின்னஞ்சல்: sm@ptfindia.org, வலைதளம்: www.ptfindia.org